

Registered as a Newspaper

# உதயன்

வெள்ளிக்கிழமை
07 நவம்பர் 2025

ஐப்பசி 21 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## நாடாளுமன்றில் இன்று அநுர அரசின் பட்ஜெட்!


### விவாதம் நாளை ஆரம்பம்

கொழும்பு, நவ. 7
தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2026ஆம் ஆண்டுக்கான பட்ஜெட், நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவால் இன்று தாக்கல் செய்யப் படவுள்ளது.
பட்ஜெட் தாக்கல் செய்யப் பட்டதும், ஜனாதிபதி அநுர அதுதொடர்பில் உரையாற்றவுள்ளார்.
இந்த உரை, பட்ஜெட் மீதான 11

வடக்கு - கிழக்கில் உள்ள

## துயிலுமில்லங்களை விட்டு இராணுவம் வெளியேறும்!

### ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளாரென அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு



கிளிநொச்சி, நவம்பர் 7
மாவீரர் துயிலுமில்லங்களில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அநுர அறிவுறுத்தியுள்ளார் என்று அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்துள்ளார். 11

## கொழும்பைச் சேர்ந்தவர் ஹெரோய்னுடன் கைது!

யாழ்ப்பாணம், நவ. 7
யாழ்ப்பாணம் - அரசடிப் பகுதியில்ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில், கொழும்பைச் சேர்ந்த சந்தேகநபர் ஒருவர் கைது 11

## தோற்கடிக்கப்பட்டது பட்ஜெட்; திசைகாட்டிக்குப் பின்னடைவு!

கொழும்பு, நவ. 7
தேசிய மக்கள் சக்தியின் ஆளுகைக்குட்பட்ட இரத்தினபுரி, கொலொன்ன பிரதேசசபையின் 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளது.
19 உறுப்பினர்களைக் கொண்ட கொலொன்ன பிரதேசசபையின் வரவு - செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு நேற்று இடம் 11



## தேர்தலைத் தாமதிப்பது ஜனநாயக விரோதம்!

### மாகாணத் தேர்தலை உடன் நடத்துக மஹிந்த தேசப்பிரிய வலியுறுத்து

கொழும்பு, நவ. 7
மாகாணசபைத் தேர்தலை நடத்தாமல் அதன் நிர்வாகத்தை ஆளுநர் ஊடாக முன்னெடுத்து வருவது ஜனநாயக விரோதச் செயல் என்று தேர்தல் ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய விமர்சித்துள்ளார். தேர்தல் ஆணைக்குழுவில் நடை 11

## புலிகளின் ஆயுதம் தேடி முல்லையில் அகழ்வு

விரிவு பக்:- 03

வித்தியா கொலை வழக்கு

## மேன்முறையீடு மீதான விசாரணைகள் நிறைவு

### ஒத்திவைக்கப்பட்டது தீர்ப்பு

கொழும்பு, நவ. 7
வித்தியா கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த பிரதிவாதிகள் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுக்கள்மீதான விசாரணைகள் நேற்று நிறைவடைந்தன.
வித்தியா கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட பிரதிவாதிகள் மேன்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்திருந்த 11

தொல்பொருளைச் சேதப்படுத்திய குற்றச்சாட்டு

## நெடுந்தீவுப் பிரதேசசபையின் தவிசாளர் கைதாகிப் பிணை



யாழ்ப்பாணம், நவ. 7
நெடுந்தீவில் தொல்பொருள் சின்னமாக அடையாளமிடப்பட்டிருந்த பகுதியைச் சேதப்படுத்திய குற்றச்சாட்டில், நெடுந்தீவுப் பிரதேசசபையின் தவிசாளர் சங்கரப்பிள்ளை சத்தியவரதன் மற்றும் வீதி ஒப்பந்ததாரர் ஆகியோர் நேற்றுக் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.
குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-
நெடுந்தீவில் வெடியரசன் கோட்டை வீதிப் புனரமைப் பின்போது தொல்பொருள் 11



கணவன், மகன் போதைப்பொருளுடன் கைது

## பதவியைத் துறந்தார் திசைகாட்டி உறுப்பினர்

கொழும்பு, நவ. 7
கணவன் போதைப்பொருளுடன் கைதாகியுள்ள நிலையில், அவரது மனைவியான தேசிய மக்கள் சக்தியின் பேலியகொட பிரதேசசபை உறுப்பினர் 11

## யாசகர் ஒருவர் சடலமாக மீட்பு

### உடுவிலில் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ. 7
யாழ்ப்பாணம் உடுவில் பேருந்துத் தரிப்பிடத்தில் இருந்து வயோதிப யாசகர் ஒருவர் நேற்று முன்தினம் சடலமாக 11

### முச்சந்தி முரளி

'உந்த ஏவல்படைகள் விலகினால் அதுவே ஆயிரம் சுடரேத்தி அஞ்சலி செய்தமாதிரித்தான் கண்டியளோ'

வினைத்திறனான வகையில்

## வருடம் முடிவதற்குள் நிதியைச் செலவிடுக

### அரச திணைக்களங்களுக்கு ஆளுநர் உத்தரவு

கிளிநொச்சி, நவ. 7
வருடம் நிறைவடைவதற்கு இன்னும் ஆறு வாரங்கள் மாத்திரமே உள்ள நிலையில், கடந்த பட்ஜெட் மூலம் ஒதுக்கப்பட்ட நிதியை திணைக்களங்கள் வினைத்திறனாகச் செலவிட வேண்டும் - இவ்வாறு வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வலியுறுத்தியுள்ளார். 11

## உடைமையில் ஆயுதங்கள் 9 சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், நவ. 7
கூரிய ஆயுதங்கள் மற்றும் போதைப்பொருள்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில், ஒன்பது சந்தேகநபர்கள் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத** — திகதி: 06.11.2025; சீட்டிழுப்பு இலக்கம்: 4247; ஆங்கில எழுத்து: S; வெற்றி இலக்கங்கள்: 06 53 54 56; விசேட எழுத்து: S

**ஹந்தஹன ராசி சுப பலன்** — திகதி: 06.11.2025; சீட்டிழுப்பு இலக்கம்: 1314; வெற்றி இலக்கினம்: மேஷம்; வெற்றி இலக்கங்கள்: 23 24 50 59

**NLB ஜய** — திகதி: 06.11.2025; சீட்டிழுப்பு இலக்கம்: 0273; ஆங்கில எழுத்து: R; வெற்றி இலக்கங்கள்: 4 4 8 0

**மெகா பவர்** — திகதி: 06.11.2025; சீட்டிழுப்பு இலக்கம்: 2353; ஆங்கில எழுத்து: T; சுப்பர் இலக்கம்: 06; வெற்றி இலக்கங்கள்: 09 27 34 55

**மஹஜன சம்பத** — திகதி: 06.11.2025; சீட்டிழுப்பு இலக்கம்: 6005; ஆங்கில எழுத்து: F; வெற்றி இலக்கங்கள்: 3 2 1 8 7 8

**தன நிதானய** — திகதி: 06.11.2025; சீட்டிழுப்பு இலக்கம்: 2035; ஆங்கில எழுத்து: U; வெற்றி இலக்கங்கள்: 09 12 65 80; விசேட எழுத்து: U

**அத சம்பத** — திகதி: 06.11.2025; சீட்டிழுப்பு இலக்கம்: 0580; ஆங்கில எழுத்து: A; வெற்றி இலக்கங்கள்: 1 8 7 8

**சுப தவசக்** — திகதி: 06.11.2025; சீட்டிழுப்பு இலக்கம்: 0121; வெற்றி இலக்கினம்: ரிஷபம்; வெற்றி இலக்கங்கள்: 11 36 41

# எல்லை தாண்டும் மீனவர்களுக்கு நிரந்தர சிறைத்தண்டனையே தீர்வு!

*வடமராட்சி கடற்றொழிலாளர் சமாச உபதலைவர் சுட்டிக்காட்டு*

**யாழ்ப்பாணம், நவ.7**

**இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறும் இந்திய மீனவர்களுக்கு, நிரந்தர சிறைத் தண்டனை விதித்தால் மட்டுமே, ஏனைய மீனவர்கள் அச்சத்தில் எல்லை தாண்டி வரமாட்டார்கள்.தமிழ்நாட்டில் தேர்தல் நடைபெறவிருப்பதால், அங்குள்ள அரசியல் செல்வாக்குமிக்கவர்களின் தூண்டுதலில் திட்டமிட்டு மீனவர்கள் எல்லைதாண்டி வருகின்றனர்.**

-இவ்வாறு வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச உபதலைவர் நாகராசா வர்ணகுலசிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய இழுவைப்படகுகளின் எல்லைதாண்டல் நெடுந்தீவு, மன்னார் உள்ளிட்ட வடக்குக் கடற்பரப்பில் தொடர்ந்து இடம் பெற்றுவருகின்றது. இந்த விடயம் அரசியல் மயப்படுத்தப்பட்டிருப்பதால், ஒரு தீர்வை எட்ட முடியாத நிலை காணப்படுகின்றது.

தமிழ்நாட்டில் தேர்தல் நடைபெறவிருப்பதால், அங்குள்ள அரசியல் செல்வாக்கு மிக்கவர்களின் தூண்டுதலில் திட்டமிட்டு மீனவர்கள் எல்லைதாண்டி வருகின்றனர்.

இதனால் மீனவர்கள் கைது செய்யப்படுகின்றனர். கச்சதீவு மீட்புக் கோசத்தை மீண்டும் கையிலெடுத்து அரசியலாக்கி வருகின்றனர்.

எனவே கைது செய்யப்படும் இந்திய மீனவர்களை விடுதலை செய்யாது, தொடர்ந்தும் சிறைத்தண்டனை விதிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். எல்லைதாண்டினால் நிரந்தரச்சிறை என்ற நிலை ஏற்பட்டாலேயே எல்லை தாண்டலைக் கட்டுப்படுத்தமுடியும் - என்றார். (சு-100)

**சுபிரி தன சம்பத** — திகதி: 06.11.2025; தினம்: வியாழக்கிழமை; வெற்றி வாரம்: 0713; ஆங்கில எழுத்து: L; வெற்றி இலக்கம்: 5 2 3 4 7 8

**Super Ball DLB** — திகதி: 06.11.2025; தினம்: வியாழக்கிழமை; சீட்டிழுப்பு வாரம்: 2979; ஆங்கில எழுத்து: A; வெற்றி இலக்கம்: 40 43 65 71

**சனிதா DLB** — திகதி: 06.11.2025; தினம்: வியாழக்கிழமை; ஆங்கில எழுத்து: G; வெற்றி இலக்கம்: 03 22 62 76; வெற்றி வாரம்: 5140

**SASIRI DLB** — திகதி: 06.11.2025; தினம்: வியாழக்கிழமை; வெற்றி வாரம்: 0809; வெற்றி இலக்கம்: 34 36 38

**லக்ன ராசி DLB** — திகதி: 06.11.2025; தினம்: வியாழக்கிழமை; கடகம்; வெற்றி இலக்கம்: 03 29 43 57; சீட்டிழுப்பு வாரம்: 4691

**KAPRUKA DLB** — திகதி: 06.11.2025; தினம்: வியாழக்கிழமை; ஆங்கில எழுத்து: X; சுப்பர் இலக்கம்: 23; வெற்றி இலக்கம்: 10 38 42 47; வெற்றி வாரம்: 2155

**அத கோடிபதி DLB** — திகதி: 06.11.2025; தினம்: வியாழக்கிழமை; ஆங்கில எழுத்து: E; வெற்றி இலக்கம்: 04 06 41 52; வெற்றி வாரம்: 2805

## தடைப்பட்டியலில் இருந்து 11 பேரின் பெயர்கள் நீக்கம்

கொழும்பு, நவ.7

பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல் மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகளுக்காகப் பெயரிடப்பட்டு பட்டியலிடப்பட்ட பதினொரு தமிழ்ப் பிரஜைகளின் பெயர்கள் பாதுகாப்புச் செயலாளரால் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் நீக்கப்பட்டுள்ளன.

பட்டியலிடப்பட்ட தனிநபர்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் அறிவுறுத்தல்களின்படி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கந்தலிங்கம் பிரேமராஜி, பாலசுப்ரமணியன் ஸ்ரீஸ்கந்தராஜா, கோமோலிஸ் பிரபாகரன், இளையதம்பி திரேசகுமரன், கந்தையா குஞ்சிதபாதம், காசிநாதன் கணேசலிங்கம், உதயத் என்கிற கிருஷ்ணாகுட்டி சுகுமாரன், குருகுலசிங்கம், தேவராசா செபமாலை, ஜாய் ஜினாஸ் துரைராசா பிரியதர்ஷனி, வேலுப்பிள்ளை சிவனடியார் ஆகியோரின் பெயர்களே நீக்கப்பட்டுள்ளன. இந்த நபர்களில் பெரும்பாலோனோர் தற்போது வெளிநாடுகளில் வசிக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## மாகாணசபைத் தேர்தல்; எதிர்க்கட்சிகள் ஆலோசிப்பு

கொழும்பு, நவ.7

வரவிருக்கும் மாகாணசபைத் தேர்தல்களில் பொதுவான உடன்பாடுகளுடன் கூடிய பொதுவான வேட்பாளர்களை முன்னிறுத்துவது குறித்து எதிர்க்கட்சிகள் கூடி முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸின் இல்லத்தில் ஆலோசித்துள்ளன என்று அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்த அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்த எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டதுடன் பரந்த எதிர்க்கட்சிக் கூட்டணியை உருவாக்குவது குறித்தும் முடிவு செய்யப்பட்டது.

மாகாணசபை முதலமைச்சர் பதவிக்கு பொதுவான வேட்பாளர்களை நிறுத்துவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டதாக பங்கேற்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொழும்பு ஊடகமொன்றிடம் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டம் எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்படப் பல பிரதிநிதிகளின் பங்கேற்புடன் நடைபெற்றுள்ளது.

எதிர்க்கட்சிகளுக்குள் பொதுவான புரிதல்களை ஏற்படுத்துதல் மற்றும் 21 ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள எதிர்ப்புப் பேரணி குறித்தும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## மக்கள் நலத்திட்டங்கள் முற்றுப்புள்ளியிடப்படும்

*அமைச்சர் சுனில் தெரிவிப்பு*



கொழும்பு, நவ.7

இந்த அரசாங்கம் எப்போதும் நிவாரணங்களை விநியோகிப்பதை மையமாகக் கொண்டு ஆட்சிக்கு வரவில்லை. நிவாரணப் பொருள்களை விநியோகிப்பதை ஓர் அரசியல் முழக்கமாக தாம் மாற்ற விரும்பவில்லை என்று தொழிற்றுறை அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நலத்திட்டங்கள் மூலம் திருப்திப்படுத்தலை முடிவுக்குக் கொண்டுவர ஒரு குறிப்பிட்ட திட்டம் வகுக்கப்படவேண்டும். அவற்றை வலுக்கட்டாயமாக அகற்றவேண்டிய அவசியமில்லை.

ஒரு சமூகமாக நாம் திருப்திப்படுத்தலைப் பெறுகிறோம் என்று சொல்ல வெட்கப்படவேண்டும்.

அத்தோடு, திருப்திப்படுத்தலை நாடுவது சட்டபூர்வமாக பிச்சை எடுப்பது போன்றது - என்றார். (ச-இ)

## வடக்கின் தென்னை முக்கோண வலயம்; ஏக்கருக்கு ரூ.30,000 மானியம்

கொழும்பு, நவ.7

வடக்கு தென்னை முக்கோணவலயத்தில் தென்னை விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 30 ஆயிரம் ரூபா மானியம் வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதுஎன்றுதென்னை அபிவிருத்திசபையின் தலைவர் சுனிமல் ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

புதிதாகப் பயிரிடப்படும் தென்னை நிலங்களுக்கு நீர் வசதிகளைப்பெறும் நோக்கில் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தென்னை முக்கோண வலயத்தில் ஒரு மில்லியன் மரக்கன்றுகளை வளர்க்கும் திட்டத்துடன் இணைந்து இந்த மானியம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஈழத்தமிழ் அகதிகளுக்கு வாக்குரிமை வேண்டும்

## வலியுறுத்துகின்றார் ராமதாஸ்

**சென்னை, நவ.7**

**தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ள ஈழத்தமிழர்களுக்கு வாக்குரிமை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.**

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும்தெரிவித்துள்ளதாவது: 1983ஆம் ஆண்டு ஈழத்தில் நிலவிய போர்ச் சூழல் காரணமாக இலட்சத்துக்கும் மேற்பட்ட ஈழத்தமிழர்கள் சொத்துகளை இழந்து தமிழ்நாட்டுக்கு வந்தனர்.

கிட்டத்தட்ட ஒரு இலட்சம் ஈழத் தமிழர்கள் இந்தியாவில் வாழ்ந்துவருகிறார்கள். இவர்கள் தமிழகத்திலுள்ள 116 முகாம்களில் வசிக்கின்றனர். பல ஆண்டுகள் இவர்கள் இங்கு வாழ்ந்தாலும் இந்திய மக்களைப் போல சுதந்திரமாக வாழ முடியாத சூழல் இன்றும் நிலவுகிறது.

தமிழ்நாட்டில் தற்போது தொடங்கவுள்ள தீவிர வாக்காளர் திருத்தப் பணியின்போது தமிழ்நாட்டில் வசிக்கும் ஈழத் தமிழர்களுக்கு அவர்களின் விருப்பத்தின் பெயரில் வாக்குரிமை அளிக்கப்படவேண்டும். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி மாநில அரசு, மத்திய அரசிடம் கேட்டுப் பெறவேண்டும். மத்திய அரசும் ஈழத்தமிழர்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு வாக்குரிமை உள்ளிட்ட அனைத்து உரிமைகளும் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வாக்குரிமை அளிக்கப்பட்டால் தான் ஈழத்தமிழர்களின் உரிமைக்காக அந்தந்தப் பகுதி மக்கள் பிரதிநிதிகள் பணியாற்றுவார்கள் -என்றுள்ளது. (எ-இ)

# இந்த ஆண்டில் இதுவரை 260 பேர் நீரில் மூழ்கி பலி

கொழும்பு, நவ.7

இலங்கையில் கடந்த ஜனவரி முதல் இதுவரையான காலப்பகுதியில் நீரில் மூழ்கி 230 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் உயிர் பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. இவ்வாறு உயிரிழந்தவர்களில் பெருமளவானோர் இளைஞர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் காலப்பகுதிக்குள் நீரில் மூழ்கியவர்களில் 195 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர். 135 உள்நாட்டுப் பிரஜைகளும், 30 வெளிநாட்டு பிரஜைகளுமே பாதுகாக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் உயிர் பாதுகாப்புப் பிரிவு தரவுகள் தெரிவிக்கின்றன. சிலாபம், தெதுரு ஓயாவிற்கு நீராடச்சென்றவர்களில் ஐவர் நேற்று முன்தினம் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். இவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்களாவர். சுற்றுலா சென்றிருந்தவேளையிலேயே இந்தத் துயரச் சம்பவம் நடந்துள்ளது. (எ-44)

# வெற்றிலை மெல்லுவதால் தினமும் மூவர் உயிரிழப்பு

கொழும்பு, நவ.7

வெற்றிலை, பாக்குச் சாப்பிடுவதால் தினமும் மூன்று பேர் இறக்கின்றனர் என்று புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு 40 ஆயிரம் புற்றுநோய் நோயாளிகள் பதிவாகக்கூடும்.

வெற்றிலை, பாக்கு சாப்பிடுவது இளைஞர்களிடையே அதிகரித்து வருகின்றது.

நீண்டகாலமாக வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு மற்றும் புகையிலை பயன்படுத்துவது வாய் மற்றும் தொண்டையில் புற்றுநோயை ஏற்படுத்துகிறது.

ஒழுங்கற்ற உணவுப் பழக்கங்களும் இந்த நிலைமைக்குப் பங்களித்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# புலிகளின் ஆயுதம் தேடி முல்லைத்தீவில் அகழ்வு

கொழும்பு, நவ.7

விடுதலைப்புலிகளின் ஆயுதங்களைத் தேடி முல்லைத்தீவு, இரட்டைவாய்க்கால் பகுதியில் அகழ்வு நடவடிக்கை ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சாலை வீதியில் வலைஞர்மடம் சந்திக்கு அருகில் விடுதலைப்புலிகள் ஆயுதங்கள் புதைத்து வைக்கப்பட்டுள்ளன என்று கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய நீதிமன்ற அனுமதியுடன் இந்த அகழ்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கனரக இயந்திரம்கொண்டு 15 அடிக்கு மேல் அகழப்பட்டபோதும், எதுவும் கிடைக்காததால் அந்த நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளது. (எ-இ)

# மாணவர்களுக்குப் புகையிலை தண்டம் 60,000 ரூபா

யாழ்ப்பாணம்,நவ.7

பாடசாலை மாணவர்களுக்குப் புகையிலை விற்ற வர்த்தக நிலையத்துக்கு 60 ஆயிரம் ரூபா தண்டம் யாழ்.மேலதிக நீதவான் நீதிமன்றால் விதிக்கப்பட்டுள்ளது.

ஊரெழு பகுதியிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் மாணவர்களுக்குப் புகையிலைத்துண்டு விநியோகிக்கப்படுவதாக பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களுக்குக் வழங்கப்பட்ட தகவலுக்கமைய மேற்கொண்ட சோதனையில் இந்தக் குற்றச்செயல் கண்டறியப்பட்டது.

அதனையடுத்து குறித்த வர்த்தக நிலைய உரிமையாளருக்கு எதிராகத் தாக்கல்செய்யப்பட்ட வழக்கு நீதிமன்றில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டபோது கடுமையான எச்சரிக்கையுடன் 60 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. தண்டம் செலுத்தத் தவறும் பட்சத்தில் வர்த்தக நிலைய உரிமையாளர் 6 மாதம் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் கட்டளையிடப்பட்டது. (ச-17)

## பலிக்கடாவா? கிலிக்கடாவா?

வந்தோரை வரவேற்கிறது எங்கட பண்பாடு. ஆனால் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டமொண்டுக்கு, ஒரு திணைக்களத்தின்ர சார்பில வந்த உத்தியோகத்தர் ஒருத்தரை "இனிமேல் அந்தாளை கூட்டத்துக்கு அனுப்பாதீங்கோ" எண்டு கடிதம் அனுப்பின கதையை எங்கையாவது கேள்விப்பட்டிருக்கிறியளோ? ஆனால் அப்பிடி ஒரு சம்பவம் மன்னாரில நடந்திருக்குது. மன்னாரில ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாலைஞ்சு நாளுக்கு முதல் நடந்தது. அதில எல்லாத் திணைக்களத்தில இருந்தும் , கூட்டத்தில கேக்கிற கேள்வியளுக்குப் பதில்சொல்லக்கூடிய அதிகாரிமார் வந்தவை. சில திணைக்களங்களில அப்பிடியான அதிகாரிமாருக்கு வேற அவசரமான வேலை இருந்ததாலையும், சிலர் லீவில நிண்டதாலையும் தங்களுக்குப் பதிலா இன்னொரு உத்தியோகத்தரை அனுப்பியிருந்தவை. கூட்டத்துக்குப் போனால் அங்க நாக்கைப் பிடுங்கிறமாதிரி நாலுபக்கத்தாலையும் வாற கேள்வியளுக்குப் பதில் சொல்லி மாளுறதைவிட, இப்பிடி பதில் உத்தியோகத்தரைப் பலிக்கடாவா அனுப்பிற விளையாட்டை சில திணைக்களத் தலைவர்மார் வைச்சிருக்கினம். அப்பிடி பலிக்கடாவா வந்த ஒருத்தரைத்தான் இனிமேல் கூட்டத்துக்கு அனுப்பவேண்டாம் எண்டு மன்னார் மாவட்ட ஜீ.ஏ. கடிதம் எழுதியிருக்கிறாராம்.

அந்தப் பிரச்சினைக்குரிய உத்தியோகத்தர் வனவளத் திணைக்களத்தின்ர சார்பில அனுப்புப்பட்டவர். அந்தத் திணைக்களத்தலைவர் கூட்டத்துக்கு வந்தால், கனக்க கேள்வியளுக்கு பதில் சொல்லாமல் தலையைக் குனிஞ்சு கொண்டு நிக்கோணும் எண்ட பயத்தில , தான் லீவைப் போட்டிட்டு இவரை அனுப்பி இருக்கிறார். ஆனால் இப்பிடிப் பலிக்கடாவா அனுப்புப்பட்டவரைக் கண்டதும், கூட்டத்துக்கு வந்த அதிகாரிமார் சிலருக்கும், கேள்வி கேக்க இருந்தவைக்கும் கலக்கமாப் போட்டுது. ஏனெண்டால் பதில் ஆள் எண்ட பேரில அவை அனுப்பி வைச்ச உத்தியோகத்தர் லேசுப்பட்ட ஆள் கிடையாதாம். ஒரு வில்லங்கம் பிடிச்ச ஒப்பீஸராம். எப்பவும் மூக்கில கோபம் வந்து துவக்கெல்லாம் எடுக்கிற ஆளாம். கொஞ்சக் காலத்துக்கு முதல், மடு றோட் போடேக்க இந்த ஒப்பீஸருக்கும், றோட்டுப்போட வந்த ஆர்.டி.ஏ.காரருக்கும் ஒரு பிரச்சினை. அந்தப் பிரச்சினையில தான் சொல்லுறதை ஆர்.டி.ஏ.காரர் கேக்கேல எண்ட கோபத்தில உடன பிஸ்டலை எடுத்துக்காட்டி "எல்லாரையும் சுட்டுத்தள்ளிப்போடுவன்" எண்டு வெருட்டி இருக்கிறார். அதைவிட நிர்வாகநடைமுறையளையெல்லாம் மீறி முசலிப் பிரதேசச் செயலருக்கு எதிரா வழக்கும் போட்டிருக்கிறார்.

இப்பிடி தன்ர வக்கிரத்தையெல்லாம் உக்கிரமாக் காட்டுற வில்லங்க ஒப்பீஸர் வந்தால் மற்றவை என்னெண்டு அவருக்கு எதிரா வாய்திறப்பினம்? பலிக்கடாவா அனுப்பப்பட்டவரைப் பார்த்து எல்லாருக்கும் கிலிபிடிச்சது தான் மிச்சம். அதால அவரை கூட்டத்தில இருந்து வெளியேத்த வேணும் எண்டு மற்றத் திணைக்கள அதிகாரிமாரும், கூட்டத்துக்கு வந்த மற்ற ஆக்களும் ஒரேகுரலில கேட்டிருக்கினம். ஆனாலும் " வந்தவரை வெளியில அனுப்பிறது சரியில்லை.ஆனால் இனிமேல் அவரை அனுப்பவேண்டாம் எண்டுகடிதம் அனுப்புவம்" எண்டுஜீ.ஏ.சொன்னபிறகுதான் ஒருமாதிரி அமளி ஒய்ஞ்சுதாம். கூட்டத்துக்கு அதிகாரிமாரை "வா வா" எண்டு கூப்பிடுற நிலைமை மாறி இனிமேல் வராதை எண்டு சொல்லுற காலமும் வந்திட்டு கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவுசெய்யநேரும். வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், உணவு விஷயத்தில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்களால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சி யான செலவாகவே இருக்கும். தாய்வழி உறவினர் களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். பிள்ளைகளை அனுசரித்துச்செல்லவும்.

**மிதுனம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும் பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் அனு கூலமாகமுடியும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படும். வாழ்க்கைத்துணையின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் உதவியுடன் சுபநிகழ்ச்சிக்கான பேச்சு வார்த்தை சாதகமாகமுடியும். கணவன் - மனைவிக் கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். ஆனால், மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படும் என்பதால், வீண் விவாதங்களில் ஈடுபடவேண்டாம்.

**கன்னி:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். இன்று குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கநேரிடும். பிள்ளைகள் நீண்டநாள்களாகக் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**துலாம்:** குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படும் என்றாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதாக இருந்தால் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. பிள்ளைகளுக்காக செலவுசெய்ய வேண்டிவரும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

**தனுசு:** வாழ்க்கைத்துணைமூலம் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன் யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவை களை நிறைவேற்றுவீர்கள். பழைய கடன் களைத் தந்துமுடிப்பீர்கள்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப் பட்டாலும், எளிய சிகிச்சையினால் உடனே சரியாகிவிடும்.

**கும்பம்:** கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தினரின் தேவைகளை நிறை வேற்றுவீர்கள்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாகமுடியும். உறவினர்கள்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச்செலவுகளும் ஏற்படக்கூடும்.

# வறட்சியான காலநிலை; பெரும்போகம் பாதிப்பு

## விவசாயிகள் அந்தரிப்பு



**கிளிநொச்சி,நவ.7**

**மழை கிடைக்காது வறட்சி நிலைமை தொடர்ந்து நீடிப்பதால் நெற்பயிர்கள் அழிவடைந்து செல்கின்றன. இதனால் இயந்திரங்கள்மூலமே வயல்களுக்கு நீர்ப்பாய்ச்சப்படுகின்றது என்று விவசா யிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

பெரும்போக நெற்செய்கையை மேற்கொண்டுள்ள விவசாயிகள் தற்போது ஏற்பட்டுள்ள வறட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அண்மையில் பெய்த மழைக்கு விதைப்பு மேற்கொள்ளப்பட்டது. தற்போது வறட்சி நிலை நீடிப்பதால் பயிர்கள் பாதிப்பை எதிர்கொண்டுள் ளன. சில விவசாயிகள் அருகில் உள்ள நீர் நிலைகளில் இருந்து தம் மிடம் உள்ள இயந்திரங்கள்மூலம் வயல்களுக்கு நீர் பாய்ச்சிவருகின் றனர். வறட்சி தொடருமானால் பெரும்போக நெற்செய்கை அழிவ டையும் நிலை ஏற்படுவதுடன் தமது வாழ்வாதாரமும் பாதிக்கப்படும் என்று விவசாயிகள் கவலை தெரி வித்துள்ளனர். (க-113)



# கலைஞர் மதிப்பளிப்பும் திரை இசை வெளியீடும்

கிளிநொச்சி, நவ.7

சுவிற்ஸர்லாந்து உறவுகள், நித்தி லம் கலையகம் என்பனவற்றின் இணை ஏற்பாட்டில், கலைஞர் மதிப்பளிப்பு மற்றும் திரை இசை வெளியீடு என்பன முகமாலை சிவபுர வளாகத்தில் நேற்றுமுன் தினம் புதன்கிழமை நடைபெற் றன.

இதன்போது ஈழத்தமிழ்க் கலை ஞர் ஒன்றியத்தின் உத்தியோக பூர்வ இணையத்தளம் ஆரம் பித்து வைக்கப்பட்டதுடன், 'மகரந் தம்' திரையிசையும் வெளியிட்டு வைக்கப்பட்டது. தொடர்ந்து 'தூவானம்' திரைப்படத்தில் பணி யாற்றிய கலைஞர்கள் மற்றும் ஈழத்தமிழ் ஒன்றியக் கலைஞர் கள் மதிப்பளிக்கப்பட்டனர்.

மூத்த சட்டத்தரணி சோமசுந்தரம் தேவராஜா தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந் தினர்களாக யாழ். பல்கலைக் கழக கலைப் பீடாதிபதி சி.ரகுராம் மற்றும் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் முன்னாள் பீடாதிபதி சு.பரமானந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-25,56)

# மாணவர்களின் ஆற்றுகை விழா

யாழ்ப்பாணம்,நவ.7

திருநெல்வேலி அநுராகம் கவின் கலை நிலையம் நடத்தும் மாண வர்களின் ஆற்றுகை விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல் லூரி சபாலிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உதவி அதிபர் சிவநாதன் பரணீ தரன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில், யாழ்ப்பாணப் பல்க லைக்கழக கலைப்பீடாதிபதி சிவசுப் பிரமணியம் ரகுராம், திருமதி ஜானகி ரகுராம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள் வர். அநுராகம் மாணவர்களின் வாய்ப்பாட்டு இசை, வீணைக் குழு இசை, வயலின் குழு இசை நிகழ்வு களைத் தொடர்ந்து, மாணவர் களுக்கான சான்றிதழ்கள் வழங் கப்படும். (க)

மாவீரநாளை முன்னிட்டு, வடமராட்சிக் கிழக்கு உடுத் துறை மாவீரர் துயிலுமில் லம், வடமராட்சிக் கிழக்கு மக்களால் நேற்றுமுன் தினம் சிரமதானம் செய் யப்பட்டது. (க-66)



# கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.7

இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட் சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌர விக்கும் நிகழ்வு பாடசாலையின் பிரதான மண் டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறும். பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் நடை பெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக தென் மராட்சிப் பிரதேச செயலர் எஸ்.சி.சத்தியசோதி, சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ந.ஜெயரூபன், கௌரவ விருந்தினராகக் கொடிகாமம் ஹற்றன் நஷனல் வங்கியின் முகாமையாளர் க.முகுந்தன் ஆகி யோர் கலந்துகொள்வர். (க-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



**மரநடுகை மாதம்**

ஒரு மரம் பட்டுப்போகுமாக இருந்தால் பட்ட அந்த மரத்துக்குப் பதிலாக அவ்விடத்தில் இன்னொரு மரத்தை நாட்டுங்கள்

—கரோலஸ் இலினேயஸ்(தாவர வகைப்பாட்டியலாளர்—

# தாமதிக்கப்பட்ட நீதியும் ஒரு கைதும்

யாழ்ப்பாணத்தில் இளைஞர் ஒருவரைத் தாயின் முன்பாக நிர்வாணப்படுத்தித் தாக்கிய சம்பவத்தின் பிரதான சந்தேகநபர் சம்பவம் நடைபெற்ற 11 மாதங்களின் பின்னர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார். குறித்த சம்பவம் தொடர்பில், சந்தேக நபர் விரைவாக இனங்காணப்பட்டிருந்தபோதும், அவரைக் கைதுசெய்வதற்கு ஏற்பட்ட தாமதத்துக்கு சில பொலிஸ் உயரதிகாரிகளின் அழுத்தமே காரணம் என்று வெளியாகியிருக்கும் தகவல்கள் வடக்கு மாகாணத்தில் சட்ட நடைமுறையாக்கல் தொடர்பாகப் பல தீவிரமான கேள்விகளை எழுப்பியிருக்கின்றது.

வடக்கில் வன்முறைச் சம்பவங்கள் குறையாமல் இருப்பதற்கும், போதைப்பொருள் வியாபாரம் நாளுக்கு நாள் வேரூன்றி வியாபித்துப் பரவுவதற்கும், கந்துவட்டி கடன்களின் பேரில் மக்களைச் சிக்கவைத்துக் கொடுமைப்படுத்தும் நிகழ்வுகள் தொடர்வதற்கும், மணல் கடத்தலுக்கும் சில பொலிஸ் அதிகாரிகளுடன் குற்றவாளிகள் வைத்திருக்கும் பின்கதவு நெருக்கமே முக்கியமான காரணம் எனப் பொதுமக்கள் பலமுறை வெளிப்படையாகக் குற்றம் சாட்டியுள்ளனர். மக்கள் இந்தக் குற்றச்சாட்டுகளை ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில்கூட நேரடியாக முன்வைத்திருந்தனர். ஆனால் ஒவ்வொரு முறையும் பொலிஸ் அதிகாரிகள் அவற்றை மறுத்துவந்தனர். இப்போது இந்தக் கைது தொடர்பாக வெளியாகியிருக்கும் தகவல், மறுக்கப்பட்ட அத்தகைய குற்றச்சாட்டுகளுக்கும் திடமான ஆதாரமாக மாறியுள்ளது.

இத்தகைய சம்பவங்கள் பொதுமக்களின் மனதில் பொலிஸ் துறையின்மீது நம்பிக்கையைக் கடுமையாகக் குறைக்கின்றன. பொதுவாக, பொலிஸ் திணைக்களம் சமூகவிரோதச் செயல்கள், போதைப்பொருள் வியாபாரம் போன்றவற்றை ஒழிக்க மக்களிடமிருந்து தகவல்களை எதிர்பார்க்கிறது. ஆனால் மக்களின் ஒத்துழைப்புக் குறைவதற்கு முக்கியமான காரணம், சில பொலிஸ் அதிகாரிகளுக்கும் குற்றவாளிகளுக்கும் இடையே உள்ள பிணைப்பே. சட்டவிரோதச் செயற்பாடுகள் பற்றி மக்கள் பொலிஸாருக்குத் தெரிவிக்கும் தகவல்கள், அடுத்தகணமே அந்தக் குற்றங்களைப் புரியும் நபர்களுக்கும் சென்றடைந்துவிடுகின்றது. அதன் பின்னர் தங்களைப் பற்றிப் பொலிஸாரிடம் தகவல் தெரிவித்தவர்கள்மீது, இத்தகைய சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடும் மாபியாக்கள் அச்சுறுத்தல் விடுப்பதும், தாக்குதல் நடத்துவதுமாக பல சம்பவங்கள் பதிவாகியிருக்கின்றன. இதனால் மக்கள் பயத்தாலும், பொலிஸார்மீது நம்பிக்கையின்மையாலும் தம்மைச் சுற்றி என்ன நடந்தாலும் வாய்மூடி மௌனிகளாக இருக்கப் பழகிவிட்டனர்.

இத்தகைய சூழலில், அரசாங்கம் வடக்கு மாகாணத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநிறுத்துவதற்காக புதிய அணுகுமுறையைக் கடைப்பிடிக்கவேண்டியது தவிர்க்க முடியாத ஒன்றாகிறது. வடக்கில் வன்முறையும், போதைப்பொருள் மாபியாவையும் ஒழிக்க அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது என்று கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகர் அண்மையில் கூறியிருந்தார். அரசாங்கம் உண்மையில் அவ்வாறு செய்ய விரும்பினால், முதலில்பொலிஸ்திணைக்களத்துக்குள் ஊடுருவியிருக்கும் ஊழலையும், சமூகவிரோதிகளுடனான தொடர்புகளையும் வெட்டி அகற்றவேண்டியது கட்டாயம். சமூகவிரோதிகளுடன் தொடர்பு வைத்திருக்கும், குற்றவாளிகளிடமிருந்து நன்மை பெறும், அல்லது குற்றவாளிகளைப் பாதுகாக்கும் பொலிஸ் அதிகாரிகள் யாராக இருந்தாலும், அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதன் மூலம் பொலிஸார் மீது இழந்துபோன மக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்க முடியும். தற்போது - மிகத் தாமதமாக நடந்துள்ள-கைதுச் சம்பவம் ஒரு தனிப்பட்ட சம்பவம் என்று கருதிக் கடந்துவிடமுடியாது. வடக்கில் சட்டம் எவ்வாறு மலினப்படுத்தப்பட்டுள்ளது என்பதற்கான எடுத்துக்காட்டாக இதைக்கொள்ளமுடியும். சட்ட நடைமுறையாக்கத்தின் நம்பகத்தன்மையை மீட்டெடுக்க அரசாங்கமும், பொலிஸ் திணைக்களமும் சில காத்திரமான மாற்றங்களைச் செய்யமுன்வரவேண்டும். அவ்வாறு செய்தால் மட்டுமே அதிகாரத்தின் துணையுடன் தப்பித்திருக்கும் சமூகவிரோதிகளைச்சட்டத்தின் முன்பாகநிறுத்தமுடியும். நாட்டில் உள்ள மக்களும் நிம்மதியுடன் வாழமுடியும்.




# போதைப்பொருள்கள், ஊழலை ஒழிப்பதில் அரசு அர்ப்பணிப்பு




## நீதி அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, நவ.7**
**போதைப்பொருள் மற்றும் ஊழலை ஒழிப்பதற்குத் தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் என்பது மக்களின் அதிகாரங்களை மக்களுக்கே திருப்பிக்கொடுக்கும் அரசாங்கமாகும். மக்களிடமிருந்து எதையும் பறித்துக்கொள்ளும் அரசாங்கம் அல்ல. சிறைச்சாலை கட்டமைப்பை மறுசீரமைப்பது இந்த அரசாங்கத்தின் முதன்மைப் பொறுப்பாகக் கருதி செயற்படுவோம். சிறைச்சாலைகள் தண்டனை பெற்றுக்கொடுக்கும் இடம் அல்ல, மாறாக அது வாழ்க்கைக்கு இரண்டாவது சந்தர்ப்பத்தை வழங்கும் மாற்றத்தின் பாடசாலையாக மாற்றப்படவேண்டும். சிறைச்சாலைகள் புனர்வாழ்வு, ஒழுக்கம் மற்றும் தார்மீக அபிவிருத்தியை மேற்கொள்கின்ற மீட்பு நிறுவனங்களாக மாற்றப்படவேண்டும். அதனால் சிறைச்சாலைக்கட்டமைப்பைவெளிப்படைத்தன்மையாகவும் பொறுப்புக்கூறக்கூடிய கட்டமைப்பாகவும் மாற்றுவது எமது அரசாங்கத்தின் இலக்காகும்-என்றார். (எ-இ)

## சுற்றிவளைப்பு 746 பேர் கைது

கொழும்பு,நவ.7
பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் 746 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
அத்துடன், பிற போக்குவரத்துக் குற்றங்களுக்காக 3,929 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ச)



## யோசித, டெய்சி பாட்டி வழக்கு அடுத்தவாரம்

கொழும்பு,நவ.7
யோசித ராஜபக்ச மற்றும் அவரது பாட்டி டெய்சி பொரஸ்ட் ஆகியோருக்கு எதிராகச் சட்டமா அதிபர் தாக்கல் செய்த வழக்கை நவம்பர் 12ஆம் திகதி விசாரணைக்கு அழைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. யோசித ராஜபக்ச மற்றும் டெய்சி பொரஸ்ட் ஆகியோர் சுமார் 73 மில்லியன் ரூபா மதிப்புள்ள சொத்துகள் மற்றும் சொத்துகளை சட்டவிரோதமாக சம்பாதித்தார் எனவும், அதன்மூலம் பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றங்களைச் செய்தார்ணவும்கூறிஅவர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## அமெ. பிரஜை சடலமாக மீட்பு

கொழும்பு,நவ.7
இலங்கைக்குச் சுற்றுலா வந்திருந்த அமெரிக்கப் பெண் ஒருவர் கண்டி அருப்போலாவிலுள்ள வீடொன்றில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். உயிரிழந்த பெண் மூன்று மாதங்களாக வாடகை வீட்டில் தங்கியிருந்தார். அன்றைய தினம் அவர் சிகிரியாவுக்கு சுற்றுலா சென்று வீடு திரும்பியிருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## போதைப்பொருள் விருந்து; 10 இளைஞர்கள் கைது!

கொழும்பு, நவ.7
கெசல்வத்த, கல்கனுவ வீதியில் பேஸ்புக்மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட விருந்தில் நடத்தப்பட்ட சோதனையின்போது ஒரு பெண் உட்பட பத்து இளைஞர்கள் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கைதுசெய்யப்பட்டவர்கள் அம்பாந்தோட்டை, தெஹிவளை, பொரலஸ்கமுவ, காலி மற்றும் கல்கிஸ்ஸை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 25 முதல் 35 வயதுக்குட்பட்டவர்களாவர்.
சந்தேகநபர்களிடமிருந்து ஐஸ் மற்றும் கொக்கைன் போதைப் பொருள்களைப் பொலிஸார் மீட்டனர். (ச-இ)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

**நாளை**
சனிக்கிழமை - ஐப்பசி 22
08.11.2025
சுபநேரம் : 03.05 - 04.35
ராகுகாலம் : 09.05 - 10.35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேட தேவையுடைய மாணவர்களுக்கான

# மாகாணமட்ட தடகளப்போட்டியில் பவித்திரா மாணவி சாதனை



யாழ்ப்பாணம்,நவ.7

விசேட தேவையுடைய மாணவர்களுக்கான மாகாண மட்ட தடகளப்போட்டியில் குட்டியப்புலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த மாணவி பத்மலிங்கம் பவித்திரா சாதனை படைத்துள்ளார்.

நீளம் பாய்தலில் இரண்டாம் இடத்தையும் 80 மீற்றர் ஓட்டத்தில் இரண்டாம் இடத்தையும் 100 மீற்றர் ஓட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார். இந்தப் போட்டி கடந்த 3 ஆம் திகதி துரையப்பா மைதானத்தில் நடைபெற்றது. (ச-555)



## முல்லைத்தீவு மேற்கு பனை தென்னை வளீ அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## Mullaitivu West Palm Resources Development Co-Operative Society (LTD)

முல்லைத்தீவு மேற்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் பின்வரும் பதவிக்கு வெளிவாரியாக ஆட்சேர்ப்புச் செய்வற்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.

பதவி :- விற்பனை உதவியாளர்
சம்பளக் குறியீட்டு இல : 308/15
சம்பள அளவுத்திட்டம் - 17435-145x10-160x10-20485

வயதெல்லையானது 18-45 வயதாகும்

மேற்குறிப்பிட்ட பதவிக்கான தகைமையினை வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவின் இணையத்தின் முகவரி www.np.gov.lk,இன் சுற்றுநிருபங்கள் பகுதியில் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் கீழ் http://np.gov.lk/cocoperative-employees-commission-cicular-2021 என்ற இணைப்பில் பார்வையிட்டுக் கொள்ள முடியும். அல்லது சங்கத்துடன் தொடர்புகொண்டு தகைமைகளினைப் பெற்றுக்கொள்ள முடியும்.


**மேலதிக தொடர்புகளிற்கு -021-2291388**
**பொதுமுகாமையாளர் -0774051425**
**விண்ணப்பமுடிவுத்திகதி - 2025.11. 15.**
**தலைவர், முல்லை மேற்கு ப.தெ.வ.அ.கூ.சங்கம் பிரதான வீதி, முள்ளியவளை**





# மரண அறிவித்தல்

தோற்றம்
09 . 11 . 1942



மறைவு
06 . 11 . 2025

## கணபதிப்பிள்ளை துரைசிங்கம் (KR)

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - வீடமைப்பு அதிகாரசபை)

அரியாலையைப் பிறப்பிடமாகவும், கனகரட்ணம் வீதி, நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை துரைசிங்கம் அவர்கள் நேற்று (06.11.2025) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கம் தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - இராசம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற கமலாதேவி (ஓய்வுபெற்ற குடும்ப நல உத்தியோகத்தர் - யாழ் போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்புக் கணவரும், ரஞ்சிதராஜ் (சுவிஸ்), வினீஷ்ராஜ் (அபிவிருத்தி உத்தியோகத்தர் மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலகம், முல்லைத்தீவு), காலஞ்சென்ற யசிந்தராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கல்யாணி (சுவிஸ்), அனோஜா (ஆசிரியர் - மு/முல்லைத்தீவு மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரீத்தி (சுவிஸ்), ஆருதி (சுவிஸ்), அஜய் (சுவிஸ்), திலோக்ஷணன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற பராசக்தி முருகேசுவின் அன்புச் சகோதரனும், பத்மாவதி (கரவெட்டி), சிறிதேவி, புஸ்பராணி, காலஞ்சென்ற இராசமணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2025) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 433 4846, 021 222 6911**

**இல. 270, கனகரட்ணம் வீதி,**
**நாயன்மார்கட்டு.**





# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 18, ஆனந்தன்வடலி வீதியில் அமைந்துள்ள 40/5 எனும் ஆதனம் எமது ஆதனப்பதிவேட்டில் வைத்திங்கம் பெண் சின்னம்மா. ஜயம்பிள்ளை வேலுப்பிள்ளை. சுப்பர் ஆறுமுகமும் வள்ளி பொன்னன் மு.சின்னத்தம்பி என பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் ஜயம்பிள்ளை வேலுப்பிள்ளை என்பவர் பெயரில் பிரசித்த நொத்தாரிசு க.தி.குமாரசாமி முகதாவில் 1922.10.10ம் திகதி 180ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதியினால் சொந்தக்காரராக இருந்தார் என்றும் குறித்த 180ம் இலக்க உறுதியானது யாழ்ப்பாண மாவட்ட பதிவேடுகளில் தொலைந்து விட்டதாக ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்திற்கு இல.302, கொழும்புத்துறைவீதி யாழ்ப்பாணம் துரைராசா பெண் ரமணி மறுநாமம் கொண்ட இராசையா மகள் ரமணி என்பவர் யாழ்ப்பாண பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் 2013.05.15ம் திகதி 9294ம் இலக்க உறுதிப்படுத்தல் உறுதியில் குறித்த ஆதனமானது தனது பூட்டனான ஜயம்பிள்ளை வேலுப்பிள்ளை செல்லத்துரைக்கு பிதாவழி முதுசமாக வந்தடைந்து அவரும் அதனை பாராதீனப்படுத்தாது விட்டிறக்க அவரது மகனும் எனது தந்தையுமான வேலுப்பிள்ளை செல்லத்துரை இராசையாவுக்கு பிதாவழி முதுசமாக வந்தடைந்த தனது சொந்தமும் ஆட்சியும் என உறுதிப்படுத்தல் சாதனம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாண மாநகர சபை யாழ்ப்பாணப் பகுதி சுண்டுக்குளி கோவிற்பற்று கொழும்புத்துறை இறை யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட 8ம் வட்டாரத்தில் வரி இல 40/3 இனைக் கொண்ட கொழும்புத்துறை கிழக்கு J/62ம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் அமைந்த தோளன்தறையும் காட்டு வளவும்" நில.பர.5 குளி 17.88 இது 2013.04.28ம் திகதி நில அளவையாளர் எம்.சி.றாபிக் தயாரித்த 4828ம் இலக்க நிலஅளவைப்படத்தில் துண்டு 1 என்றும் என்னால் சுட்டிய விபரித்தபடி நிலபர.5 குளி 17.88 இதன் எல்லை:

கிழக்கு : பிறிமகலா டேவிட் யேசுதாஸ் சிவராசா நாகேஸ்வரி செந்தில்நாதன் உமாபதி தர்மலிங்கம் யோசப் முகமதுஅலி அன்னரத்தினத்தினம் ஆகியோரது ஆதனங்கள்.
வடக்கு : பவானி புஸ்பநாதன் பீற்றர் பேரின்பநாயகம் பிலிக்ஸ் கரோலின் ஆகியோரது ஆதனங்கள்
மேற்கு : றோட்
தெற்கு : ஒழுங்கையும் தர்மலிங்கம் யோசப்பினதும் ஆதனமும் இதடங்கலும்.

தற்போது இவ்வாதனத்தை இராசையா மகள் ரமணி மறுநாமம் துரைராசா பெண் ரமணி என்பவர் தனது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும். உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது இராசையா மகள் ரமணி மறுநாமம் துரைராசா பெண் ரமணி என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**முதல்வர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(...46232) E





# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 18, கொழும்புத்துறைவீதி 4ம் குறுக்குத்தெரு 20 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சின்னத்தம்பி குமாரசாமியும் சிவகுரு பெண் சின்னப்பிள்ளையும் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் சின்னத்தம்பி சுப்பையா அவர்கள் 01.02.1956ம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு சுப்பிரமணியம் இரத்தினசிங்கம் முகதாவில் 3548ம் இலக்க காணிமாற்றல் உறுதி மூலம் யாழ்ப்பாணம் சின்னத்தம்பி குமாரசாமிக்கு வழங்கியுள்ளார்

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் தாமோதரம்பிள்ளை நல்லையா அவர்கள் 24.02.1964ம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு சு.செ.மகாதேவா முகதாவில் 3388 ம் இலக்க அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம் சின்னத்தம்பி குமாரசாமிக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் கொழும்புத்துறைவீதி 4ம் குறுக்குத்தெரு கோபாலசிங்கம் திருலோகநாதனும், கோபாலசிங்கம் விமலநாதனும், கோபாலசிங்கம் கமலநாதனுமாகிய நாங்கள் 28.05.2003ம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு வேலுப்பிள்ளை நடராஜா முகதாவில் 5435 ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் தங்கள் சகோதரியாகிய துரைசிங்கம் அமுதினிக்கு வழங்கியுள்ளார். மேலும் குறித்த ஆதனம் சின்னத்தம்பி குமாரசாமிக்கு காணிமாற்றல் உறுதியாலும் அறுதி உறுதியாலும் சொந்தமாக இருந்து அவரின் பின் எங்கள் தகப்பனார் குமாரசாமி கோபாலசிங்கத்திற்கு வந்தடைந்து அவரின் பிள்ளைகளாகிய தங்களுக்கு வந்தடைந்த உரிமையும் ஆட்சியும் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்றிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று கொழும்புத்துறை இறை அழிவிவளவு நிலப்பரப்பு 3 (மூன்று) (பதிவு D243/219) இதில் சொரியலாய் அரைவாசி. மேலும் இறை அழவிவளவு நிலப்பரப்பு இரண்டரை (21/2) பதிவு D250/275) இதில் சொரியலாய் அரைவாசி இவ்விரு ஆதனங்களும் ஒன்று சேர்ந்து பிரித்து தெற்குப்பக்கமாக ஆட்சிபண்ணிய நில பர 23/4 அதன் விபரம் வடமாகாணம் யாழ்ப்பாணம்டிஸ்றிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று கொழும்புத்துறை இறை அழிவிவளவு நிலப்பரப்பு இரண்டேமுக்கால் நில.பர 2 3/4 வீடும் செய்பயிர் வான்பயிர்களும் இதற்கு எல்லை

கிழக்கு : கணபதி தில்லைநாதனின் ஆதனம்
வடக்கு : சின்னத்தம்பி பொன்னுத்துரையின் ஆதனம்
மேற்கு : றோட்டு
தெற்கு : ஒழுங்கை
இதனடங்கலும்

தற்போது இவ்வாதனத்தைதுரைசிங்கம் அமுதினி என்பவர் தனது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராத விடத்து குறித்த ஆதனமானதுதுரைசிங்கம் அமுதினி என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**முதல்வர்**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவர்கள் பிரச்சினைக்கு பட்ஜெட்டில் தீர்வு கிடைக்குமா?

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கேள்வி

**கொழும்பு, நவ.7**

**நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளால் எதிர்வரும் காலங்களில் மேலும் 5000க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு ஆயத்தமாகிவருகின்றனர். மருத்துவர்கள் சேவையிலிருந்து நீங்குவதைத் தவிர்ப்பதற்கும், சுகாதாரத்துறையிலுள்ள ஏனைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் 2026 வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளால் சுமார் 2000 மருத்துவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். 5000க்கும் அதிகமான மருத்துவர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் வெளிநாடு செல்வதை தடுத்து, இலவச சுகாதாரசேவையைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும்.

மேலும் மருத்துவமனைகள், சுகாதார நிலையங்களில் நிலவும் அத்தியாவசிய மருந்துத் தட்டுப்பாடுகளும் நிவர்த்திசெய்யப்படவேண்டும்.

மருந்துத் தட்டுப்பாட்டுக்குத் தீர்வு வழங்கப்பட்டால் மாத்திரமே வினைத்திறனான மருத்துவ சேவையை வழங்க முடியும். - என்றார். (ச-இ)


## கஞ்சாப் பொதிகளுடன் இரு படகுகள் மீட்பு

கொழும்பு,நவ.7

38 கிலோகிராம் கேரளக் கஞ்சாப்பொதிகளுடன் கடற்கரையில் தரித்துவிடப்பட்டிருந்த இரண்டு டிங்கிப் படகுகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

உச்சமுனை களப்பு மற்றும் கற்பிட்டிக் கடற்கரைப் பகுதியில் வடமேற்குக் கடற்படையினர் மேற்கொண்ட கண்காணிப்பு நடவடிக்கை ளின்போது அவை மீடகப்பட்டன.

இதில் 18 பொதிகளில் மறைத்துவைக்கப்பட்டிருந்த சுமார் 38 கிலோகிராம் கேரளக் கஞ்சாப்பொதிகள் மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட கஞ்சாப்பொதிகள் மற்றும் டிங்கிப்படகுகள் மேலதிக சட்டநடவடிக்கைகளுக்காக புத்தளம் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (க-இ)



## வீதி விதிமுறைகள்; பொலிஸார் தெளிவூட்டல்

யாழ்ப்பாணம், நவ. 7

வீதி விதிமுறைகள் தொடர்பாகப் பாடசாலை மாணவர்களுக்குத் தெளிவூட்டும் விழிப்புணர்வு நிகழ்வு ஊர்காவற்றுறைப் வீதிப் போக்குவரத்துப் பொலிஸாரின் ஏற்பாட்டில் வேலணை மத்திய கல்லூரி அதிபர் வி.இ.ஹஸ்ரன் றோய் தலைமையில் யாழ். வேலணை மத்திய கல்லூரிக்கு முன்பாக நேற்று வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த விழிப்புணர்வு நிகழ்வில் வீதி ஒழுங்கு தொடர்பாகச் செயன்முறைகள் ஊடாக மாணவர்களுக்கு விளக்கங்கள் வழங்கப்பட்டன. அத்துடன் முறையற்ற போக்குவரத்து முறைகளால் ஏற்படும் ஆபத்துகள் தொடர்பாகவும் மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. (ச-66-27)

## ரூ.103 கோடி மோசடி பஸிலிடம் விசாரணை

கொழும்பு.நவ.7

முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச 2010 முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலகட்டத்தில் 1.03 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பொது நிதியை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டுகள் தொடர்பில், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழு விசாரணை களை ஆரம்பித்துள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் மற்றும் வீண்விரயத்துக்கு எதிரான மக்கள் அமைப்பின் தலைவர் கமந்த துஷார, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவில் பஸிலுக்கு எதிராக முறைப்பாடளித்துள்ளார்.

உள்நாட்டுப் பயணங்களுக்கு விமானப்படை விமானங்களைப் பயன்படுத்தியமை, ஜனாதிபதி செயலகத்துக்குச் சொந்தமான 14 வாகனங்களைப் பயன்படுத்தியமை, பாதுகாப்புக்காகப் பயன்படுத்தப்படும் மூன்று சொகுசு வாகனங்கள் மற்றும் 11 பிற வாகனங்களால் ஏற்பட்ட இழப்பு, 64 கடற்படையினர் மற்றும் 84 இராணுவத்தினரை தனிப்பட்ட பாதுகாப்புக்கு நியமித்து, பொது நிதியில் அவர்களுக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் என்பன செலவிட்டமை உள்ளிட்ட விடயங்கள் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன. (க-இ)

## 'கோத்தா கோ கம' தாக்குதல்; 31 சந்தேகநபர்கள் அடையாளம்

கொழும்பு, நவ.7

2022 ஆம் ஆண்டு மே மாதம் காலிமுகத்திடல் 'கோத்தா கோ கம' போராட்டத்தில் தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளில் 31 சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சட்டமா அதிபர் நேற்றுமுன்தினம் உயர்நீதிமன்றத்தில் அறிவித்துள்ளார்.

சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான அரச சட்டத்தரணி சஜித் பண்டார, இந்தச் சந்தேகநபர்களுக்கு எதிராக விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல்செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் நீதிமன்றத்துக்குத் தெரிவித்தார். 2022ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆம் திகதி காலிமுகத்திடல் 'கோத்தா கோ கம' போராட்டத்தில் தாக்குதல் நடத்தப்பட்டபோது அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்காது சட்டம் ஒழுங்கை நடைமுறைப்படுத்தத் தவறியதன்மூலம் பொலிஸ் அடங்கலாக பிரதிவாதிகள் தமது அடிப்படை மனித உரிமைகளை மீறியுள்ளனர் என்று தீர்ப்பு வழங்கக்கோரிப் போராட்டக்காரர்கள் குழுவால் தாக்கல்செய்யப்பட்ட 5 அடிப்படை உரிமை மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே அரச சட்டத்தரணி இந்த அறிவிப்பை வெளியிட்டார். (எ-இ)

## சுற்றுலா சாரதிகளுக்கு யாழில் இருநாள் பயிற்சி

யாழ்ப்பாணம்,நவ.7

சுற்றுலாத்துறையில் பணிபுரியும் முச்சக்கர வண்டி மற்றும் கார் சாரதிகளுக்கு இரு நாள் பயிற்சி, பருத்தித்துறை நகரசபையில் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற வுள்ளது.

ஜனாதிபதி செயலக அனுசரணையுடன், தூய இலங்கை தேசிய வேலைத்திட்டத்தின்கீழ், சுற்றுலாத்துறையில் பணிபுரியும் முச்சக்கரவண்டி மற்றும் கார்ச்சாரதிகளின் நெறிமுறைகள் மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்கான மனப்பாங்கு மேம்பாட்டுப் பயிற்சித்திட்டம் வடக்கு மாகாண ரீதியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக பருத்தித்துறை நகரசபையில் நாளை சனிக்கிழமையும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை பயிற்சி வழங்கப்படும். (ம-க)

## சுகாதாரமின்றி இயங்கிய உணவகத்துக்குத் தண்டம்

கிளிநொச்சி,நவ.7




அக்கராயனில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் ஏற்கனவே அறிவுறுத்தல்கள் வழங்கியும், தொடர்ந்தும் சுகாதாரமற்ற முறையில் இயங்கிய உணவகத்துக்கு நீதிமன்றால் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

அக்கராயன் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் இ. விதுசன் தலைமையிலான குழுவினர் கடந்த மாதம் அக்கராயனில் உள்ள உணவகங்களைப் பரிசோதனைக்கு உட்படுத்தினர். இதன்போது குறித்த உணவகம் பல்வேறு சுகாதாரச் சீர்கேட்டுடன் செயற்பட்டமை அவதானிக்கப்பட்டது. இதனையடுத்து உணவக உரிமையாளருக்கு எதிராக கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் வழக்குத் தாக்கல்செய்யப்பட்டது. வழக்கை விசாரணை செய்த நீதவான், கடை உரிமையாளரைக் கடுமையாக எச்சரித்ததுடன், 20 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தும் தீர்ப்பளித்தார். (க-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
08
.
09
.
1988



மறைவு
10
.
10
.
2025

கடந்த 10.10.2025 அன்று சிவபதமடைந்த எமது அன்புச்செல்வம்

### அமரர் இராஜகுலேந்திரன் நிலோயன்

(இரவுநேரக் காவலாளி - தும்பளை சிவப்பிரகாச ம.வி, நாகர்கோவில் ம.வி கலட்டி றோ.க.த.க.பாடசாலை)

அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 08.11.2025 சனிக் கிழமை காலை 6.00 மணியளவில் தாமரைக்குளத்தடி அந்தியேட்டி (கல்லூரி வீதி, பருத்தித்துறை) மடத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும், நாளை மறுதினம் (09.11.2025) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும், அன்னார் நோயுற்ற வேளையில் நாம் உதவி தேவை எனக்கோரிய போது பணம் மற்றும் ஏனைய வழிகளிலும் மனமுவந்து உதவி செய்தவர்களுக்கும், அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளம், துண்டுப்பிரசுரம், பனர்கள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் இன்னும் பல்வேறு வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பு: இவ் அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சந்தைமேற்கு ஒழுங்கை,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்

(CR 46229) E

## ஐப்பசி வெள்ளி வழிபாடுகள்

ஐப்பசி வெள்ளியை முன்னிட்டு முருகன் ஆலயங்களில் இன்று வெள்ளிக்கிழமை விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள் ளன. முருகப்பெருமானுக்கு சிறப்பு அபி சேகத்தைத் தொடர்ந்து, விசேட வழிபாடு கள் இடம்பெறும். நீர்வேலி கந்தசுவாமி ஆலயம், செல்வச்சந்நிதி முருகன் ஆல யம், மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் உள்ளிட்ட முருகன் ஆலயங்கள் சிறப்பு வழிபாடுகள் இடம்பெறும். (க-17)

**கட்டட வேலை**
மாபிள் - நிலக்கல்லு
கட்டட வேலை எதுவாக
இருந்தாலும் செய்து தரப்படும்.
தொடர்பு: 077 940 7993

## மரண அறிவித்தல்

பிறப்பு
27
.
04
.
1954



இறப்பு
05
.
11
.
2025

### யோகானந்தன் இன்பமணி

காரைநகரைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட யோகானந்தன் இன்பமணி அவர்கள் 05.11.2025 புதன்கிழமையன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான சீனியர் - பாக்கியம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராசையா - இலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகளும், யோகானந்தன் அவர்களின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 07.11.2025 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு அராலி வடக்கு வட்டுக்கோட்டை செட்டியார் மடத்தில் உள்ள சகோதரர் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


077 904 9087, 075 5825251
077 860 7757

தகவல்:
கணவர் (யோகானந்தன்),
குடும்பத்தினர்

(CS 59838) E

## மரண அறிவித்தல்

தோற்றம்
05
.
03
.
1949



மறைவு
04
.
11
.
2025

### சிவசரணம் சந்திரபாலு

(ஓய்வுபெற்ற CTB சாரதி மற்றும் சாலைப் பரிசோதகர்)

மண்டைதீவு 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் மற்றும் தற்போது 1ம் ஒழுங்கை, அம்பாள் வீதி, கொக்குவில் மேற்கினை வதிவிடமாகவும் கொண்ட சிவசரணம் சந்திரபாலு அவர்கள் கடந்த 04.11.2025 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசரணம் - யோகாம்பிகை தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் - மகாலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், மகாராணி அவர்களின் அன்புக் கணவரும், ஜெயசுந்தரேஸ்வரா, ஜெயசௌந்தரேஸ்வரா, ஜெயகிருஷ்ணா, ஜெயகௌரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கோபனா, யசோதரா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஜெரீசன் இன் பாசமிகு தாத்தாவும், சந்திரவதனா, காலஞ்சென்ற சத்தியசீலன் மற்றும் வல்லவாம்பிகை, காலஞ்சென்ற சத்திதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சுஜாதாதேவி,ஜெயகுணதிலகம் மற்றும் ஜெயசோதி, சுசீலாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2025) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியை களுக்காக முற்பகல் 11.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

1ம் ஒழுங்கை, அம்பாள் வீதி,
கொக்குவில் மேற்கு.

தகவல் :
குடும்பத்தினர்
077 227 1217

## மரண அறிவித்தல்

தோற்றம்
09
.
05
.
1953



மறைவு
03
.
11
.
2025

### சுப்பிரமணியம் இரத்தினசபாபதி

புலோலியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கொட்டடியை வசிப்பிட மாகவும் கொண்ட சுப்பிரமணியம் இரத்தினசபாபதி அவர்கள் கடந்த 03.11.2025 திங்கட்கிழமை அன்று அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சிவகங்கை தம்பதியரின் மருமகனும், சிவாஜினியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான சுகிர்தமாலா, தில்லைநாதன் மற்றும் பிரசாந்தன், நிஷாந்தினி, துளசிகா, நிரோஜா ஆகியோரின் அன்புத் தகப்பனும், சிறிரங்கன், சுரேந்திரன், சிவகுமார் ஆகியோரின் மாமனாரும், அகன்யா, ஆதிரன், விதுசன், துசான் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2025) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

20/8, வைரவர் கோவில் லேன்,
ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி.

தகவல் :
குடும்பத்தினர்

(CS 59834) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு
# 2026 ஆம் ஆண்டிற்கான மீள் கேள்வி அறிவித்தல்

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் சந்தைகள், இறைச்சிக் கடைகள், முல்லைத்தீவு கடற்கரை சிற்றுண்டிச்சாலை, கருவாட்டுக்கடைகள் என்பவற்றினை 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி முதல் டிசம்பர் மாதம் 31ம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 07.11.2025 தொடக்கம் 20.11.2025 இ 2.30 மணி வரை(கடமை நாட்களில்)
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 21.11.2025 முற்பகல் 10 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :- 21.11.2025 முற்பகல் 10.30.

1. கேள்விப்பத்திரத்தினை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை தவிசாளர் கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு. என்னும் முகவரிக்கு முத்திரை இட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் 21.11.2025 முற்பகல் 10 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென கரைதுறைப்பற்று பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு 21.11.2025 முற்பகல் 10 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் கிராமசேவையாளரினால் வழங்கப்பட்ட பிரதேச வதிவிடச்சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் நேரடியாக கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திற்கு சமூகமளிக்க வேண்டும். கரைதுறைப்பற்று பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
3. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்பட மாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்பட மாட்டாது.
4. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வி தொடர்பிலும் இறுதி முடிவெடுப்பது தொடர்பில் கேள்விச்சபைக்கே பூரண அதிகாரமுண்டு.
5. எம்மால் நிர்ணயிக்கப்படும் இடத்தில் மாடுகள், ஆடுகள் கட்டப்பட்டு அனுமதிக்கப்பட்ட கொல்கலத்திலேயே இறைச்சிக்குரிய மாடுகள், ஆடுகள் அறுக்கப்பட வேண்டும்.
6. எமது சபையின் சந்தைகள், இறைச்சிக்கடைகளிலிருந்து 1KM தூரத்திற்குட்பட்ட கடைகளில் அல்லது வேறு எவ்விடத்திலும் மரக்கறிகள், இறைச்சி விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது.
7. ஒவ்வொரு கேள்விப்பத்திர வகைகளுக்கும் அதிகூடிய கேள்வித்தொகை கூறும் கேள்விதாரருக்கு சபையுடனான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் மீள் கேள்வி அறிவித்தல் செய்யப்படும்.
8. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து 03 நாட்களுக்குள் அல்லது சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் குறிப்பிட்ட கேள்வித் தொகையின் 1/3 பகுதியை பாதுகாப்பு வைப்பாக செலுத்தி குத்தகை ஒப்பந்த உடன்படிக்கை பூர்த்தி செய்தல் வேண்டும்.
9. சந்தைகள், இறைச்சிக் கடைகள், முல்லைத்தீவு கடற்கரை சிற்றுண்டிச்சாலை, கருவாட்டுக்கடைகள் என்பவற்றிற்கு விண்ணப்பம் பெறுபவர்கள் முன்பு சபையின் கடை நடாத்தியவராயின் எதுவித நிலுவையும் இல்லை என்பதனை உப அலுவலக பொறுப்பதிகாரியால் உறுதிப்படுத்திய கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.
10. மாத வாடகை யாவும் விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் மாற்றத்தை ஏற்படுத்தும்.
11. கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை 021-2290001 என்ற தலைமை அலுவலக பிரதேசசபையின் தொலைபேசி மூலம் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | பொதுசந்தை குத்தகை மற்றும் இறைச்சிக்கடை விபரம் | கேள்விப்படிவக் கட்டணம் (VAT,NB) நீங்கலாக | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் ரூபா | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (VAT,NB) நீங்கலாக | கடைக்குரிய மாதாந்த வாடகைத் தொகை ரூபா |
|---|---|---|---|---|---|
| முல்லைத்தீவு உப அலுவலகம் | | | | | |
| 1 | முல்லைத்தீவு கோழியிறைச்சிகடை | 2,000.00 | 18,000.00 | 1,757,000.00 | 5,000.00 |
| 2 | முல்லைத்தீவு மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 19,000.00 | 1,891,000.00 | 5,000.00 |
| 3 | முல்லைத்தீவு கருவாட்டுக்கடை | 2,000.00 | 1,000.00 | 81,090.00 | 5,000.00 |
| 4 | சிலாவத்தை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 12,500.00 | 1,215,500.00 | - |
| 5 | முல்லைத்தீவு பொதுச்சந்தை | 2,000.00 | 11,000.00 | 1,092,250.00 | - |
| 6 | முல்லைத்தீவு கடற்கரை சிற்றுண்டிச் சாலை | 2,000.00 | 5,000.00 | 475,300.00 | 4,500.00 |
| 7 | சிலாவத்தை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 4,600.00 | 455,000.00 | - |
| 8 | சிலாவத்தை பொதுச்சந்தை | 2,000.00 | 1,300.00 | 121,999.00 | - |
| முள்ளியவளை உப அலுவலகம் | | | | | |
| 9 | தண்ணீரூற்று கோழியிறைச்சிக் கடை | 2,000.00 | 21,500.00 | 2,125,090.00 | 2,700.00 |
| 10 | தண்ணீரூற்று மாட்டிறைச்சிக் கடை | 2,000.00 | 28,500.00 | 2,830,000.00 | 2,700.00 |
| 11 | தண்ணீரூற்று கருவாட்டுக்கடை | 2,000.00 | 500.00 | 22,950.90 | 2,700.00 |
| 12 | முள்ளியவளை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 7,500.00 | 719,500.00 | 3,150.00 |
| 13 | முள்ளியவளை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 13,500.00 | 1,350,000.00 | 3,150.00 |
| 14 | கேப்பாபிலவு கோழியிறைச்சிக்கடை | 2,000.00 | 500.00 | 15,500.00 | 1,500.00 |
| 15 | கேப்பாபிலவு மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,500.00 | 140,000.00 | 1,500.00 |
| 16 | முள்ளியவளை பொதுச்சந்தை | 2,000.00 | 18,200.00 | 1,810,000.00 | - |
| 17 | தண்ணீரூற்று பொதுச்சந்தை | 2,000.00 | 31,000.00 | 3,060,900.00 | - |
| 18 | வற்றாப்பளை பொதுச்சந்தை | 2,000.00 | 500.00 | 38,000.00 | - |
| 19 | கேப்பாபிலவு பொதுச்சந்தை | 2,000.00 | 500.00 | 4,700.00 | - |
| செம்மலை உப அலுவலகம் | | | | | |
| 20 | செம்மலை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 500.00 | 8,300.00 | 1,000.00 |
| 21 | அளம்பில் மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 4,000.00 | 394,117.50 | 2,000.00 |
| 22 | குமுளமுனை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,200.00 | 112,011.30 | 1,750.00 |
| 23 | செம்மலை பொதுச்சந்தை | 2,000.00 | 500.00 | 24,500.00 | - |
| 24 | அளம்பில் பொதுச்சந்தை | 2,000.00 | 500.00 | 9,900.00 | - |
| 25 | குமுளமுனை பொதுச்சந்தை | 2,000.00 | 2,200.00 | 210,500.00 | - |
| கொக்கிளாய் உப அலுவலகம் | | | | | |
| | கொக்கிளாய் கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 5,000.00 | 473,810.00 | 1,000.00 |
| 27 | கொக்கிளாய் மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 6,000.00 | 567,100.00 | 1,000.00 |
| முள்ளிவாய்க்கால் உப அலுவலகம் | | | | | |
| 28 | முள்ளிவாய்க்கால் மாட்டிறைச்சிகடை | 2,000.00 | 1,200.00 | 103,500.00 | 1,000.00 |
| 29 | முள்ளிவாய்க்கால் கோழியிறைச்சிகடை | 2,000.00 | 500.00 | 46,000.00 | 1,000.00 |
| 30 | புதுமாத்தளன் மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 500.00 | 42,000.00 | - |
| 31 | முள்ளிவாய்க்கால் பொது சந்தை | 2,000.00 | 500.00 | 2,551.50 | - |
| | 1வது கேள்வி கோரல் | | | | |
| 32 | முல்லைத்தீவு பேருந்து நிலைய கடை | 2,000.00 | 10,500.00 | 1,038,610.77 | - |

தவிசாளர்
கரைதுறைப்பற்று பிரதேச சபை, முல்லைத்தீவு.
2025.11.07

# முஸ்லிம் மக்களை ஒதுக்கும் எண்ணம் புலிகளுக்கு எப்போதும் இருந்ததில்லை

## கஜேந்திரன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், நவ.7

முஸ்லிம் மக்களைப் புறமொதுக்கித் தனியான தமிழர் தேசத்தைக் கட்டியெழுப்பும் எண்ணம் விடுதலைப்புலிகளுக்கு இருந்ததில்லை. தமிழ், முஸ்லிம் மக்களிடையே முரண்பாடுகளை ஏற்படுத்தும் விதமாகப் பேரினவாத ஆட்சியாளர்கள் மேற்கொண்ட நகர்வுகளே சில துயரமான முடிவுகளை எடுப்பதற்குத் தமிழர்களைத் தள்ளியிருந்தது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கசப்பான சம்பவங்களை மறந்து தமிழர்களும், முஸ்லிம்களும் ஒற்றுமையாகத் தமிழர் தேசத்தில் வாழவேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் முஸ்லிம் காங்கிரஸின் தலைவருடன் ஒப்பந்தமொன்றை மேற்கொண்டார்.

இந்தச் செயற்பாடுகளுக்கு இதயபூர்வமானதொரு பங்களிப்பைச் செலுத்தி முஸ்லிம் மக்களை அரவணைக்கவேண்டும், அவர்களுக்கு மேலான நம்பிக்கையைக் கொடுக்கவேண்டுமென்ற அடிப்படையில் பிரிகேடியர். தமிழ்ச்செல்வன் அர்ப்பணிப்பான பணிகளை ஆற்றியிருந்தார். முஸ்லிம்களும் தமிழர் தேசத்தின் ஒரு அங்கம் என்ற எண்ணம் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆழ்மனதிலிருந்தது. சமாதான உடன்படிக்கையின் பிரகாரம் 'ஷிரான்' என்ற கட்டமைப்பு உருவாக்கப்பட்டிருந்தது. போரால் அழிந்துபோன வடக்கு கிழக்கை மீளக்கட்டியெழுப்பும் வகையில் அபிவிருத்தி சார்ந்த வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கானதொரு கட்டமைப்பாகத்தான் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னரும்கூட தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டுவிடக்கூடாது என்பதில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் கவனமாகச் செயற்பட்டுவருகின்றன- என்றார். (எ-66)

## பணியாளர் தேவை

புடவை வியாபார நிலையம் ஒன்றிற்கு சாறி, சல்வார் வியாபாரத்தில் அனுபவமுள்ள ஆண்கள் தேவை.

சம்பளம் - 75,000/-

தொடர்புகளுக்கு:- 077 202 7029

(CS/46230) 1-1

## 13ம் ஆண்டு நினைவஞ்சலி

### சவரிமுத்து தோமஸ்



பிறப்பு 19.01.1950 இறப்பு 07.11.2012

(முன்னாள் தொழிநுட்பவியலாளர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் Rtd, Technision, Royal Airforce of oman)

பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய்
எமக்கு வழிகாட்டியாய்
எம்மை விட்டுப் பிரிந்து
பதின்மூன்று ஆண்டு
நகர்ந்தாலும் நம்மை
விட்டு அகலாது உங்கள்
நினைவுகள்.

கெனடி வீதி.
நாவாந்துறை

குடும்பத்தினர்.

## 20ம் ஆண்டு நினைவஞ்சலி



### பிலேந்திரன் ஜேம்ஸ்

அப்பா !

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் பல கடந்தாலும்
உங்கள் நினைவில் வாழும்

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

தோற்றம் 18.08.1936 மறைவு 07.11.2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் காற்றாலைகளை ஒழிக்கும்வரை போராடுவோம்

## அருட்தந்தைமாக்கஸ் அடிகளார் தெரிவிப்பு

**மன்னார், நவ.7**

**காற்றாலைக்கு எதிரான எமது போராட்டக்குரலுக்குச் செவிசாய்த்த ஜனாதிபதிக்குப் போராட்டக்குழு சார்பாக நன்றிகள். எனினும் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் 14 காற்றாலைகளும் அகற்றப்பட்டு ஏற்கனவே அமைக்கப்பட்ட காற்றாலைகளால் ஏற்படும் பாதிப்புகள் நிவர்த்திசெய்யப்பட்டால் மாத்திரமே போராட்டத்தைக் கைவிடுவோம் -இவ்வாறு மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.மாக்கஸ் அடிகளார் தெரிவித்தார்.**

மன்னாரில் காற்றாலைக்கு எதிராக 95ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் பங்கேற்று அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் காலத்தில் எவ்விதமான காற்றாலைத் திட்டங்களும் மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்படாது என்கின்ற செய்தியை ஜனாதிபதி தெரிவித்திருந்தார். இதனூடாக தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் 14 காற்றாலைக்கான வேலைத்திட்டங்கள் நிறுத்தப்படாது என்கின்ற விடயம் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. குறித்த 14 காற்றாலைகளும் அகற்றப்பட்டு, ஏற்கனவே அமைக்கப்பட்ட காற்றாலைகளால் ஏற்படும் பாதிப்புகள் நிவர்த்திசெய்யப்பட்டு, அதற்கான உத்தரவாதம் வழங்கப்படுகின்ற போதே இந்தப்போராட்டம் நிறுத்தப்படும். -என்றார். (ச-25, 56)


# மஞ்சரி இதழ் வெளியீடும் பரிசளிப்பு விழாவும் இன்று

யாழ்ப்பாணம், நவ. 7

சாவகச்சேரி நகராட்சிமன்றத்தின் சாவகச்சேரி பொதுநூலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட 2024ஆம் ஆண்டுக்கான தேசிய வாசிப்புமாத செயற்றிட்டப் போட்டிகளில் வெற்றிபெற்று தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு சாவகச்சேரி நகராட்சிமன்ற பொன்விழா மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 9 மணிக்கு நடைபெறவுள்ளன.

சாவகச்சேரி நகராட்சிமன்ற தவிசாளர் வ. ஸ்ரீபிரகாஸ் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பா. பார்த்திபன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ப. பரணிதரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதன்போது, தேசிய வாசிப்பு மாதத்தில் பாடசாலைமட்ட மற்றும் முன்பள்ளி சிறார்களுக்கான போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள், வாசகர்மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற நூலக வாசகர்கள் ஆகியோருக்கான பரிசல்கள் வழங்கப்படவுள்ளன. இதே வேளை சிறந்த நூலக அங்கத்தவர், சிறந்த சிறுவர் பகுதி நூலக அங்கத்தவர், சிறந்த பத்திரிகைத் துறை வாசிப்பாளர் ஆகியோருக்கான விருதுகளும் வழங்கப்படவுள்ளதோடு நகரமஞ்சரியின் இரண்டாவது இதழ் வெளியீட்டு நிகழ்வும் இடம்பெறும். (ச-25,9-159)



# நீரிழிவு தினத்தையொட்டி யோகா, மூச்சுப் பயிற்சி

யாழ்ப்பாணம்,நவ.7


உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ்.நீரிழிவு கழகத்தினரால் 'யோகா மற்றும் மூச்சுப்பயிற்சிமூலம் மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்தல்' எனும் தொனிப்பொருளில் யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் கல்லூரியில் யோகாப் பயிற்சி அண்மையில் நடத்தப்பட்டது.

இதன்போது யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அலகினால் யோகா மற்றும் மூச்சுப்பயிற்சிகள் செய்து காண்பிக்கப்பட்டன. நிகழ்வில் விரிவுரையாளர் கேதீஸ்வரன் மற்றும் யாழ்.நீரிழிவுக்கழக அங்கத்தினர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25)

# மரண அறிவித்தல்

பிறப்பு 03 - 03 - 1942

இறப்பு 03 - 11 - 2025



## நீக்கிலஸ் ஜோர்ஜ் செல்வரத்தினம்

## (செல்வண்ணா) (பத்திரிகை முகவர் – நெல்லியடி)

முதலாம் தெரு துரையன்தோட்டம் நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நீக்கிலஸ் ஜோர்ஜ் செல்வரத்தினம் அவர்கள் கடந்த (03.11.2025) திங்கட்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நீக்கிலஸ் - மாணிக்கவதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சலேத்து - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மேரிலில்லி கனகமணி அவர்களின் அன்புக் கணவரும் அமுதா, அமலதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் செபஸ்ரியன்ஜீவகுமார் அவர்களின் அன்பு மாமனாரும் ஏவான் அன்ரோவின் அன்புப் பேரனும் அமரர் ஜோசப் நவரத்தினம், அமரர் ஜேம்ஸ் குணரத்தினம் மற்றும் லியோ விஜயரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் அன்ரன், யேசுகுமார், அன்ரோனியா, யஜிந்தா, சரோஜினிதேவி, செல்விராணி, அமரர் யோகரத்தினம், கிறிஸ்ரீனா ஜெயமணி, பற்றீமாஜெயரூபி, நவமணிதேவி, அமரர் ஜெயராணி, பத்மநாதன், ரஞ்சினிதேவி, யசோதாதேவி, அமரர் நிர்மலாதேவி ஆகியோரின் சகோதரனும் அன்ரன் இராசநாயகம், பிலோமினா, றெஜினா சந்திரோதயம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (07.11.2025) வெள்ளிக்கிழமை பி.ப 02.30 மணியளவில் அன்னாரது இல்லத்திலிருந்து பூதவுடல் கரவெட்டி தேவமாதா ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு கீரிப்பல்லி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கரவெட்டி தெற்கு, கரவெட்டி.


021 226 5773, 077 625 8034, 077 718 6426

தகவல்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 08 . 1978

மறைவு 06 . 11 . 2025



## தர்மசீலன் கணேஸ்வரன் (கஜன்)

## (கடற்றொழில் பரிசோதகர்)

அளவெட்டியை பிறப்பிடமாகவும் K.K.S. வீதி, மருதனார்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மசீலன் கணேஸ்வரன் (கஜன்) அவர்கள் நேற்று (06.11.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மசீலன் - சாரதாதேவி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நல்லநாதன் மற்றும் சகுந்தலாதேவி தம்பதியரின் மருமகனும், நிரஞ்சலாவின் (முன்னாள் தாதிய உத்தியோகத்தர்) அன்புக் கணவரும், நயனிதா (தரம் 10, உடுவில் மகளிர் கல்லூரி), ஆருத்திரன் (தரம் 07, யா/ இந்துக் கல்லூரி), ஷாரதா, ஹரதா (தரம் 04, உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜிதாவின் மைத்துனரும், சரோஜினி, ஜெயமலர், ஜெகசோதி மற்றும் காலஞ்சென்ற சதானந்தன் ஆகியோரின் பெறாமகனும், சுபத்திராதேவி, காலஞ்சென்றவர்களான பாலராசா, பாலசிங்கம், சுசீலாதேவி ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2025) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் K.K.S. வீதி, மருதனார்மடத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தனக்கிரியைக்காக பூதவுடல் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 4332)

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொத்து வரி நடைமுறையாகுமா? பகிரங்கப்படுத்தவேண்டும் அநுர

## வலியுறுத்துகின்றார் சம்பிக்க

கொழும்பு, நவ.7

சர்வதேச நாணயநிதியத்தின் பரிந்துரைக்கமைய 2027 மற்றும் 2028ஆம் ஆண்டளவில் சொத்து வரி நடைமுறைப்படுத்தப்படுமா? இல்லையா? என்பதையும், 2025ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் எத்தனை விடயங்கள் செயற்படுத்தப்பட்டன என்பதையும் ஜனாதிபதி மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

2025ஆம் ஆண்டு அரச வருமானத்தை அதிகரித்து விட்டோம் என்று அரசாங்கம் குறிப்பிடுவதைத் தர்க்க ரீதியில் ஆராயவேண்டும். சகல துறைகளிலும் வரிகளை அதிகரித்துவிட்டு அதன் ஊடாகவே அரச வருமானம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆட்சிக்கு வந்தவுடன் சுகாதாரம் மற்றும் கல்வி, பாடசாலை உபகரணங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள வற் வரி முழுமையாக இரத்துச்செய்யப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். ஆட்சிக்கு வந்து ஒருவருடம் நிறைவடைந்துள்ளது. ஆனால் இந்த விடயம் மறக்கப்பட்டுள்ளது. 2027 மற்றும் 2028 ஆண்டுகளில் சொத்து வரியை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் நிபந்தனை விதித்து செயற்றிட்டங்களைப் பரிந்துரைத்துள்ளது. சொத்து வரி நடைமுறைப்படுத்தப்படுமா என்பதை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க 2026ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட உரையின் போது நாட்டு மக்களுக்குக் குறிப்பிடவேண்டும் - என்றார்.

(எ-இ)

---

### நாடாளுமன்றில்...

இரண்டாவது வாசிப்பாகக் கருதப்படும். பட்ஜெட் தொடர்பான விவாதம் நாளை தொடக்கம் எதிர்வரும் 14ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது. 14ஆம் திகதிமாலை இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. இதைத் தொடர்ந்து, அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் நவம்பர் மாதம் 15ஆம் திகதி ஆரம்பமாகும். பாதீடு மீதான இறுதி வாக்கெடுப்பு டிசெம்பர் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது.

2026ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் அரசாங்கத்தின் ஒட்டுமொத்த செலவினமாக 4 ஆயிரத்து 434 பில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது. நிதி அமைச்சுக்கே கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்படி, 634 பில்லியன் ரூபா நிதி அமைச்சுக்காக வழங்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சுக்கு 455 பில்லியன் ரூபாவும், சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சுக்கு 554 பில்லியன் ரூபாவும், கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சுக்கு 301 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன், உள்ளாட்சி மற்றும் மாகாணசபைகள் அமைச்சுக்கு 618 பில்லியன் ரூபாவும், பொதுநிர்வாக அமைச்சுக்கு 596 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் வரி அதிகரிப்பு இடம்பெறாது என அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-ம-44)

### தோற்கடிக்கப்பட்டது...

பெற்றது. இதன்போது, ஆளுங்கட்சி உறுப்பினர்கள் 9 பேர் பட்ஜெட்டுக்கு ஆதரவாக வாக்களித்தனர். ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சர்வஜன கட்சி என்பவற்றின் 10 உறுப்பினர்கள் வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்தனர். இதையடுத்து ஒரு மேலதிக வாக்கால் பட்ஜெட் தோற்கடிக்கப்பட்டது. தேசிய மக்கள் சக்தியின் ஆளுகையின் கீழ் உள்ள உள்ளாட்சி சபையொன்றில் பாதீடு தோற்கடிக்கப்பட்ட முதல் சந்தர்ப்பமாக இது பதிவாகியுள்ளது.

(அ-ம-44)

### கொழும்பைச்...

செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் போதைத் தடுப்புப் பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. சந்தேகநபரிடம் இருந்து 2 கிராம் 250 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

(அ-ம-26)

### தேர்தலைத்...

பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசாங்கம் பொறுப்பேற்று ஒரு வருடத்துக்குள் மாகாணத்தேர்தல் நடத்தப்பட வேண்டும் என உறுதியளிக்கப்பட்டது. ஆனால், இன்றளவும் தேர்தலை நடத்தாமல், ஆளுநர்கள் ஊடாக ஆட்சி அதிகாரத்தை நிர்வகித்து வருகின்றனர். இது ஜனநாயகத்துக்குப் பொருத்தமற்ற நடவடிக்கை.

மாகாணசபைகள் எனப்படுபவை மக்களின் சபைகள். எனவே, மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்தான் அங்கு ஆட்சிபுரிய வேண்டும். ஆளுநர்கள் ஊடாக அந்தச் சபைகளைக் கொண்டுநடத்துவது சட்டவிரோதச் செயற்பாடு. இத்தகைய செயற்பாடுகளை எக்காரணம் கொண்டும் ஏற்கமுடியாது - என்றார்.

(அ-ம-44)

### பதவியைத்...

பதவி விலகியுள்ளார். அநுராதபுரம் எப்பாவல பகுதியிலுள்ள பாடசாலையொன்றின் அதிபர் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுகின்றார் என பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது. இதையடுத்து, எப்பாவல பகுதியில் அந்த அதிபருக்குச் சொந்தமான ஹோட்டலொன்று சுற்றிவளைக்கப்பட்டது. இதன்போது, அங்கிருந்து ஒரு கிலோ ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டதுடன், சந்தேகநபரான அதிபர் கைது செய்யப்பட்டார். அவரது மகனும் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரின் மனைவி பேலியகொட பிரதேசசபையில் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினராகச் செயற்பட்டு வருகின்றார். இதையடுத்தே, அவர் பதவி விலகியுள்ளார்.

'நாட்டில் நல்லதொரு அரசியற் கலாசாரத்தை உருவாக்கும் நோக்கில் பதவியில் இருந்து விலகியுள்ளேன்' என்று அவர் அறிவித்துள்ளார்.

(அ-ம-44)

### நெடுந்தீவுப்...

சின்னமாக அடையாளமிடப்பட்டிருந்த பகுதி சேதமாக்கப்பட்டிருந்தது. இதையடுத்து, நேற்று முன்தினம் சாரதிகள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

துறைசார் திணைக்களம் மேற்கொண்ட மேலதிக நடவடிக்கையின் பிரகாரம் யாழ். மாவட்டக் குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். மேலதிக விசாரணைகளின் அடிப்படையில் நேற்றையதினம் நெடுந்தீவுப் பிரதேசசபையின் தவிசாளர் மற்றும் வீதி ஒப்பந்ததாரர் ஆகியோர் யாழ்.மாவட்டக் குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். கைதான இருவரும் நேற்று மாலை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். இதையடுத்து, அவர்களைத் தலா ஒரு இலட்சம் ரூபா பிணையில் நீதவான் விடுவித்தார்.

(அ-ம-26-66)

### வருடம்...

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டம், கிளிநொச்சி மாவட்ட திறன் விருத்தி மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அங்கு ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது:-

2025ஆம் ஆண்டு நிறைவடைவதற்கு இன்னும் ஆறு வாரங்கள் மட்டுமே உள்ளன. எனவே, கடந்த பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட நிதி தொடர்பில் அனைத்துத் திணைக்களங்களும்

கூட்டுப்பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். அந்த நிதியை வினைத்திறனான முறையில் செலவிட வேண்டும். ஒப்பீட்டளவில் இந்த வருடம் அரச திணைக்களங்களின் ஒத்துழைப்பு சிறப்பாக இருந்துள்ளது. அடுத்த ஆண்டிலும் இத்தகைய செயற்பாடுகள் அவசியம் - என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் க. இளங்குமரன், சி.சிறீதரன், ஜெ.றஜீவன், உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பாதுகாப்புத் தரப்பினர் எனப் பலரும் இந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

(அ-ம-113)

### உடைமையில்...

யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த இரண்டு தினங்களாக விசேட சுற்றிவளைப்புகள் இடம்பெற்று வருகின்றன. இதன்போதே, இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கூரிய ஆயுதங்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு பேரும், பகுதி பகுதியாக ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஏழு பேரும் என ஒன்பது பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

(அ-ம-44)

### யாசகர்...

மீட்கப்பட்டுள்ளார். கொல்லன்கலட்டி பகுதியைச் சேர்ந்த சின்னன் தங்கராசா (வயது-74) என்ற முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தனது குடும்பத்தினரைப் பிரிந்து ஆதரவற்ற நிலையில் வீதிகளிலும், பேருந்துத் தரிப்பிடங்களிலும் வசித்து வந்த நிலையிலேயே அந்த முதியவர் நேற்றுமுன்தினம் மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயாலசிங்கம் மேற்கொண்டார்.

(அ-ம-26)

### மேன்முறையீடு...

னர். அவர்களின் மனுக்கள் மீதான விசாரணையே நேற்றுடன் நிறைவடைந்துள்ளது. இதையடுத்து, வழக்கின் தீர்ப்பை ஒத்திவைப்பதாக உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன தலைமையிலான ஐவரடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனுக்கள் மீதான விசாரணை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

(அ-ம)

### துயிலுமில்லங்களை...

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதன் பின்னர் அமைச்சர் சந்திரசேகர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்ததாவது:


உயிரிழந்த மாவீரர்களை நினைவுகூர்வதற்கு தமிழ் மக்களுக்கு முழுச் சுதந்திரம் உள்ளது. இதை எவரும் மறுத்துரைக்க முடியாது. போர்க்காலத்தில் படையினரால் கைப்பற்றப்பட்ட காணிகளை தற்போதைய அரசாங்கம் விடுவித்து வருகின்றது. இதன் தொடர்ச்சியாக, மாவீரர் துயிலுமில்லங்களில் நிலைகொண்டுள்ள இராணுவத்தையும் வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

துயிலும் இல்லங்களில் நிலைகொண்டுள்ள இராணுவத்தை வெளியேற்றுவதற்கு உரிய பொறிமுறைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அநுரவால் பாதுகாப்புச் செயலருக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இதற்குரிய நடவடிக்கைகள் விரைவில் இடம்பெறும் - என்றார்.

(அ-ம-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பகமான பங்காளியாக இந்தியா துணை நிற்கும்



## இந்தியத்தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவிப்பு

**கொழும்பு, நவ.7**

**இலங்கை அதன் பொருளாதார மீட்சி மற்றும் நிலையான வளர்ச்சிக்கான பயணத்தைத் தொடங்கியுள்ள நிலையில், இந்தியா ஒரு நம்பகமான பங்காளியாக, நம்பிக்கைக்குரிய நண்பனாக மற்றும் மிக நெருங்கிய அண்டை நாடாக உறுதியாக நிற்கும் என்று இலங்கைக்கான இந்தியத்தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார். பொதுதனியார் கூட்டாண்மை தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-


வர்த்தகம், முதலீடு, சுற்றுலா, எரிசக்தி, உட்கட்டமைப்பு, தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தி போன்ற பல துறைகளில் இரு நாடுகளுக்கும் வலுவான உறவுகள் உள்ளன. நமது நாடுகளுக்கு இடையேயான வர்த்தகம் மற்றும் முதலீட்டுப் பாய்ச்சல்கள், நமது செழிப்பு ஒன்றோடொன்று இணைந்தவை என்பதையும், நமது வளர்ச்சிப் பரஸ்பரமாக இருக்கவேண்டும் என்பதையும் காட்டுகின்றன. நமது மக்கள் சேவைக்கு மட்டுமல்லாமல், உலகளாவிய தெற்குப் பகுதிக்கும் உத்வேகம் அளிக்கும் கூட்டாண்மை மாதிரிகளை நமது இரு நாடுகளும் இணைந்து உருவாக்க முடியும்.

அனைத்துத் துறைகளிலும் இலங்கைக்கு இந்தியா தனது வலுவான மற்றும் நிலையான உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்துகிறது -என்றார். (எ)

BRIDE WANTED
We are seeking a life partner for a Jaffna Vellalar Hindu Gentleman, aged 55 years, divorced, and of high professional and social standing.
We invite proposals from Jaffna Vellalar Hindu ladies, either living in Sri Lanka or abroad, who value family, culture, and compatibility.
075 014 9130

## யாழ்ப்பாணத்தில் குருதிக்கொடை!


யாழ்ப்பாணம்,நவ.7



இலங்கை மின்சாரசபையின் 56 ஆவது ஆண்டுவிழாவை முன்னிட்டு இலங்கை மின்சாரசபையின் வட மாகாண ஊழியர் நலன் புரிச்சங்கம் மற்றும் விளையாட்டுச் சங்கத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள இலங்கை மின்சாரசபையின் வடக்கு மாகாணப் பிரதிப் பொதுமுகாமையாளர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

குருதிக்கொடை முகாமில் குருதிக்கொடையாளர்கள் பங்கேற்று உதிரக்கொடையளிக்குமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-66)

கண்ணீர் அஞ்சலி



பிறப்பு
03 . 03 . 1942

இறப்பு
03 . 11 . 2025

நீக்கிலஸ் ஜோர்ஜ் செல்வரத்தினம்

(உதயன் பத்திரிகை முகவர் - நெல்லியடி)

அவர்கள் காலமான செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைகின்றோம்.
அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதயன்
குழுமத் தலைவரும்,
பணியாளர்களும்.

(CS/57326) J-1

## ரணிலின் ஆலோசகர் பிணையில் விடுவிப்பு

கொழும்பு, நவ.7

நிதி அமைச்சின் முன்னாள் செயலாளரும் ரணில் விக்கிரமசிங்கவின் முன்னாள் சிரேஷ்ட ஆலோசகருமான சரித ரத்வத்தே பிணையில் செல்ல கொழும்பு நீதிவான் நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

2015ஆம் ஆண்டில், ரணில் விக்ரமசிங்க பிரதமராக இருந்த காலத்தில் அவரது சிரேஷ்ட ஆலோசகராக சரித ரத்வத்தே பணியாற்றினார்.

அதே ஆண்டில் 50 நெல் களஞ்சியசாலைகளுக்குச் சட்டவிரோதமாகப் பொருள்களை இறக்குமதிசெய்து அரசாங்கத்துக்கு 9 கோடி ரூபா நட்டத்தை ஏற்படுத்தியதாக அவர்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## நல்லிணக்க உறவுப்பாலம் அனலைதீவில் நிகழ்வுகள்

அனலைதீவு, நவ. 7

யாழ். மாவட்ட இளைஞர் கழக சம்மேளனம், ஊர்காவற்றுறைப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம், அனலைதீவு அருணோதயா இளைஞர் கழகம் என்பன குருநாகல் மாவட்டத்தின் இளைஞர், யுவதிகளும் இணைந்து 'நல்லிணக்க உறவுப்பாலம்' எனும் தொனிப் பொருளில் கலை கலாசாரப் பாரம்பரிய நிகழ்வுகளை நடாத்தவுள்ளன.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் அனலைதீவு அருணோதயா கலையரங்கில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்வு எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை வரை நடைபெறவுள்ளது. (ச-25, 9)

## வலி.வடக்குப் பிரதேசசபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள்

வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் உள்ளூராட்சி வார இறுதி நிகழ்வும் விருது வழங்கல் விழாவும் பன்னாலை வர்த்தலம் கற்பக விநாயகர் ஆலய மண்டபத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பத்மநாதன் பார்த்தீபன் பிரதம விருந்தினராகவும், தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவ கலாநிதி பரராஜசிங்கம் நந்தகுமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25,66-159)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.11. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org